**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. : | CC 22/2025 (45/2016) |
| Deposition of witness for | | Prosecution : | LW10 – PW10 |
| | | Defence : | |
| | | Court : | |
| Name : | கோவிந்தன் | Father's Name: | ராமசாமி |
| | | Husband Name: | |
| Village/Town : | திருவண்ணாமலை | Taluk : | |
| Mail ID: | | Calling : | |
| | | Age : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். நான் கடைசியாக மங்கலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து 2019ம் ஆண்டு உதவி காவல் ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றேன். கடந்த 2015ம் ஆண்டு 09.09.2015ம் தேதியில் வேட்டவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலின் அடிப்படையில் சுமார் 02.00 மணியளவில் மேறப்டி தகவலைப் பெற்று சுமார் 03.00 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இவ்வழக்கின் வாதி கன்னியம்மாள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து தானாக முன்வந்து இவ்வழக்கின் எதிரியான அய்யப்பன் மீது புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்து காவல் நிலையம் வந்து சுமார் 04.00 மணிக்கு குற்ற எண்.226/2015, இ.த.ச.பிரிவுகள் 294(ஆ), 324 ஆகிய

பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரியான அய்யப்பனின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். அதன் பின்னர் மேற்படி கணம் நீதித்துறை நடுவர்–2, திருவண்ணாமலை நீதிமன்றத்திற்கு அசல் முதல் தகவல் அறிக்கையை அனுப்பிவிட்டு மற்றொரு பிரதியை மேலதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டு நான் மற்றொரு முதல் தகவல் அறிக்கை பிரதியை எடுத்துக்கொண்டு சம்பவயிடமான செல்லங்குப்பம் கிராமம் வாதியின் வீட்டின் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரிவரைபடம் ஆகியவற்றை சாட்சிளான சுசீலா மற்றும் ராஜலட்சுமி ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.6** மற்றும் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கன்னியம்மாள், கண்ணுற்ற சாட்சிகளான சகுந்தலா, காசியம்மாள், சதாகுப்பத்தா (எ) அஞ்சலா, கன்னியம்மாள், க/பெ. சின்னத்தம்பி மற்றும் கேள்விப்பட்ட சாட்சிகளான குப்பன் ஆகியோர்களையும் விசாரணை செய்தும் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான சுசீலா மற்றும் ராஜலட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே எதிரி அய்யப்பன் என்பவரை வேளானந்தல் பஸ்ஸ்டாப் அருகே மாலை 06.30 மணிக்கு குற்றக்காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் கடந்த 30.09.2015ம் தேதியன்று மேற்படி கன்னியம்மாளுக்கு சிகிச்சையளித்த மருத்துவரான டாக்டர். தீபக்குமார் அவர்களை அனுகி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து அவர் அளித்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றேன். பின்னர்

மேற்படி காயச்சான்றினை பார்வையிட்டதில் கன்னியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இ.த.சபிரிவுகளான 294(ஆ), 324 என்பதை இ.த.ச.பிரிவுகள் 294(ஆ), 326 ஆக பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி அய்யப்பன் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை**

அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்பையில் தான் நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று புகார்வாக்குமூலம்பெற்று வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி எங்களுக்கு தகவல் வந்ததற்காக Intimation register ஏதும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவம் என்பது வீட்டிற்கு உள்ளே நடைபெற்றதா அல்லது வீட்டிற்கு வெளியே நடைபெற்றதா என்று ஏதும் குறிப்பிட்டு கன்னியம்மாள் புகார் அளிக்கவில்லை என்றால் வீட்டில் இருந்தபோது என்றுத்தான் புகார் அளித்துள்ளார். நான் புகாரினை பதிவு செய்யும் போது அ.சா.1 கன்னியம்மாள் அரசு மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி சம்பவயிடம் சென்று விசாரணை செய்த போது அ.சா.1 னின் கணவர் அங்கு இல்லை என்றால் இருந்தார். வரைபடத்தில் சம்பவம் என்பது எங்கு நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் வாதியின் வீட்டின் முன்பு என்று காண்பித்துள்ளேன். மேற்படி சம்பவமானது அ.சா.1 வீட்டில் இருந்த போது தான் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்

மாதிரிவரைபடத்தில் சம்பவம் வீட்டிற்கு வெளியே என்று காண்பித்து ஒரு பொய்யான வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.1 யை எதிரி தாக்கியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ள ஆயுதமானது இரும்பு கம்பி (கடப்பாரை மாதிரி) உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நான் மேற்படி ஊர்ஜிதம் செய்யும் வகையில் கடப்பாரையா அல்லது இரும்புக்கம்பியா என்று மேலும் புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மேற்படி இரும்புக்கம்பியோ அல்லது கடப்பாரையோ ஏதும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எதிரியின் மனைவி மகாலட்சுமி என்பவர் அசா.1 னிம் சென்று அ.சா.1 யை அசிங்கமாக பேசியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சம்பவத்தைக்குறித்து எனது விசாரணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவத்தை பார்த்த நபர்களின் பெயர்களை ஏதும் அ.சா.1 குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீட்டில் வசிப்பவர்கள் யாரையும் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் மேற்படி நபர்கள் யாரும் முன்வரவில்லை அதனால் நான் சேர்க்கவில்லை. அ.சா.7 குப்பன் எனது விசாரணையில் ஏதேனும் 08.09.2015 ம் தேதியன்று 03.00 மணியளவில் அ.சா.1 க்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் கட்டுபோட்டு இருந்ததாக எனது விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.2 என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அ.சா.1 கன்னியம்மாள் காலையிலேயே விழுந்துவிட்டார் அதன் பின்னர்தான் அவரது கணவர் குப்பன் மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை. நான் அ.சா.1 க்கு ஏற்பட்ட கொடுங்காயத்தை நுண்கதிர் படம்பிடித்த நபரை நான் விசாரிக்கவில்லை

என்றால் சரிதான். மேற்படி நுண்கதிர் படத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் என்பது வீட்டின் வாசப்படியில் இடித்தால் ஏற்பட்ட காயம் என்றாலும், ஏற்கனவே அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்பகையைப் பயன்படுத்தி இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நானே புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து, நானே குற்றயிறுதியறிக்கை தயார் செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/- M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்